**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
- - - - -

# IN THE COURT OF THE SESSIONS JUDGE, MAHALIR NEETHIMANDRAM, MADURAI.

| | | |
|---|---|---|
| **Case No.** | : | **SC NO. 581 / 2018** |
| **Deposition of witness for** | : | **PW : 1** |
| **Name** | : | திருமதி.பாக்கியலெட்சுமி |
| **Father's Name** | : | |
| **Village** | : | |
| **Taluk** | : | |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 3173 of the day of **11.04.2022**

**முதல் விசாரணை :**

நான் S.பெருமாள்கோவில்பட்டியில் குடியிருந்து வருகிறேன். ஆஜர் எதிரிகளைத் தெரியும். எனது கணவர் இறந்து 6 மாதம் ஆகின்றது. என் நாத்தனார் பசும்பொன், ஆகியோர் பெண் கேட்டு வந்தார்கள். ஒரு வருடம் ஆகட்டும், வருடம் திரும்பட்டும் என்று சொன்னேன். அதலாம் எங்களுக்கு பெண் கொடுங்கள் என்று சொன்னார்கள். எதிரிகள் அனைவரும் எனது மூத்த பெண் சிவப்பிரியாவை 1 வது எதிரி விருமாண்டிக்கு பெண் கொடுக்குமாறு கேட்டார்கள். கேட்டு வரவும், நான் வாடிப்பட்டியில் உள்ள எனது அண்ணன் நாகேந்திரன், முத்து மனைவி ஜோதி ஆகியோரிடம் கேட்டேன். அவர்கள் நீ கைம்பெண்ணாக இருக்கிறாய், உனக்கு என்று சொந்தம் வேண்டும், எனவே எனது மூத்தமகள் சிவப்பிரியாவை கட்டுக்கொடு என்று சொன்னார்கள். அதன் பேரில் நான் 1 வது எதிரிக்கு எனது மூத்தமகளை கட்டிக்கொடுத்தேன். 7 ம் தேதி 9 ம் மாதம் 2016 ம் வருடம் கட்டிக்கொடுத்தேன். நாகமலைபுதுக்கோட்டையில் உள்ள தனலெட்சுமி மஹாலில் வைத்து கட்டிக்கொடுத்தேன். திருமணத்திற்கு பிறகு 1 வது எதிரியும் எனது மகளும் காசி, பசும்பொன், கண்ணன் ஆகியோருடன் கீழக்குடியில் ஒரே வீட்டில்

கூட்டாக குடியிருந்தார்கள். கூட்டாக இருந்த போது, 1 மாதம் நன்றாக இருந்தார்கள். பின்னர் நகையைக் கேட்டு பிரச்சனை செய்தார்கள். எனது மகளுக்கு திருமணத்தின்போது 30 பவுன் நகையும், 3 லட்சம் ரூபாய் மதிப்புள்ள சீர் வரை பண்ட பாத்திரங்கள் கொடுத்தேன். நகை கேட்டு ஆஜர் எதிரிகள் பிரச்சனை செய்தார்கள். நகையை வைத்து வட்டிக்கு கொடுக்கனும் என்று கேட்டுக்கொண்டே இருந்தார்கள். நகை கேட்டு சண்டை போட்டார்கள் என்று எனக்கு தகவல் வந்தது. எனது மகள் கோவித்துக் கொண்டு அவர் இறப்பதற்கு 15 நாட்களுக்கு முன்பு வீட்டிற்கு வந்துவிட்டார். 6 நாட்களுக்கு முன்பு நாகமலைபுதுகோட்டையில் உள்ள எனது நாத்தனார்கள் ஈஸ்வரி, சிவரஞ்சனி ஆகியோர் எனது மகளை கூட்டிக்கொண்டு சென்றார்கள், திருமணம் முடிந்து 2 மாதத்திலேயே எனது மகள் கர்ப்பமாக இருந்தார். எனது மகள் இறக்கும்போது 4 மாத கர்ப்பமாக இருந்தார். காலை சுமார் 08.30 மணிக்கு என் மகள் எனக்கு போன் செய்து, நகையைக் கேட்டு, எனது மாமியாரும்,வீட்டுக்காரரும் தொல்லை செய்கிறாங்க, நீ தம்பியை அனுப்பி வை மா, ஊருக்கு வாரேன்மா என்று சொன்னுச்சு. நான் என்னமா என்ன பிரச்சனை என்று கேட்டபோது, நீ தம்பியை அனுப்பிவிடு, நான் ஊருக்கு வந்து சொல்றேன் என்று சொன்னார். பின்னர் நானும் எனது மகனும் கீழக்குடிக்கு டுவிலரில் சென்று கொண்டிருந்த போது, எனது மருமகன் விருமாண்டி போன் அடித்து, சிவப்பிரியாவிற்கு உடல்நிலை சரியில்ல, உடனே வாங்க என்று சொன்னார். அவர் போன் அடித்து வைக்க எனது கொழுந்தன் சமுத்திரப்பாண்டி எனக்கு போன் அடித்து நீ உடனே சென்று உனது மகளைப்பார் என்று சொன்னார். நான் கீழக்குடியில் வீட்டில் சென்று பார்த்தபோது, எனது மகள் போர்வை வைத்து பொத்திக்கிடந்தார். (சாட்சி அழுது கொண்டே நா தழுதழுக்க சாட்சியம் அளிக்கிறார்). நான் என் மகளுக்கு என்ன ஆச்சு என்று கேட்டபோது, உனது மகள் நான்டுக்கிட்டு செத்துடுச்சு என்று ஆஜர் எதிரிகள் சொன்னார்கள். நான் மயங்கி விழுந்துவிட்டேன். சாந்தி பூசன், ஜெயபிரகாஷ், மலைச்சாமி, சின்னச்சாமி ஆகிய நான்கு பேரும் எனது மகளை தூக்கினார்கள். நான் அதைப் பார்த்ததும்

மயங்கி விழுந்துவிட்டேன். நாகமலைப் புதுக்கோட்டையில் உள்ள மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள். ஆஸ்பத்திரிக்கு நான் சென்று டிரீட்மெண்ட் எடுத்து வருவதற்குள், எனது மகள் சிவப்பிரியாவை, அந்த ஊரில் உள்ள சமுத்திரபாண்டி, சாந்திபூசன், ஜெயபிரகாஷ், மலைச்சாமி, சின்னச்சாமி ஆகியேர் தூக்கி எரித்துவிட்டார்கள். நான் பிறகு நாகமலைபுதுக்கோட்டை ஸ்டேசன் சென்று புகார் கொடுத் தேன். எனது மகள் 4 ம் தேதி 2 ம் மாதம் 2017 ம் ஆண்டு இறந்துவிட்டார். நான் எனது மகள் வீட்டிற்கு சென்று பார்த்தபோது, காலை சுமார் 09.30 மணி இருக்கும். என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்தது தான். **புகார் அதசாஆ.** 1 **ஆகும்.** RDO அம்மா வந்து விசாரித்தார்கள்., என்னிடம் காட்டப்படும் வர்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த வாக்குமூலம் அதசாஆ.2 ஆகும். என் மகளுடன் சேர்த்து 2 உருசு போயிருச்சு, என் புருஷனும் போயிட்டார். என் மகளும் போயிடுச்சு. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>**எதிரிகள் தரப்பில் கு.வி.**</u>

எதிரி விருமாண்டி எனது கணவரின் சகோதரியின் பையன் என்றால் சரிதான். எதிரி பசும்பொன் என்பவர் எனது கணவரின் உடன் பிறந்த சகோதரி ஆவார். எதிரி ஜெயப்பிரகாஷ் எனது கணவரின் அண்ணன் மகன். சாட்சி நாகேந்திரன் எனது சகோதரர். சாட்சி ஜோதி எனது அண்ணன் மனைவி ஆவார். மதுபாலா என்பவர் ஜோதியின் மகள் ஆவார். சசிக்குமார் மதுபாலாவின் கணவர். சாட்சி சந்திரா எனது உடன் பிறந்த சகோதரி. மணிகண்டன் சந்திராவின் கணவர். சமுத்திரபாண்டி என்பவர் எனது கணவரின் கடைசித் தம்பி. கழுவத்தேவர் எங்கள் ஊரில் முக்கியமான நபர் மற்றும் எங்களுக்கு சொந்தக்காரர். எனது கணவர் இறந்த பிறகு எனது மூத்த மகளுக்கு பெண் கேட்க கழுவத்தேவர், சமுத்திரபாண்டி, எனது நாத்தனார் பசும்பொன், ஆகியோர் வந்தார்கள். எனது மகள் சிவப்பிரியா, அண்ணலெட்சுமி மற்றும் எனது மகன் அருண்பாண்டி ஆகியோர் தான்

எங்கள் வீட்டில் இருக்கிறோம். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். எனது மகன் அருண்பாண்டி சிவப்பிரியாவின் திருமணத்தின் போது படித்துக்கொண்டு இருந்தார். எனது கணவர் இறந்தபோது, அவரது இறப்பிற்கு உறவினர்கள் வந்தபோதே, 1 வது எதிரிக்கு எனது மூத்தமகள் சிவப்பிரியாவை கொடுப்பது பற்றி பேச்சுவார்த்தை நடந்தது. போன மாதம் எனது 2 வது மகள் அன்னலெட்சுமிக்கு திருமணம் நடைபெற்றது. எங்கள் வீட்டில் சின்ன சண்டை சச்சரவு வந்தாலே சிறு வயதிலேயே எனது பிள்ளைகள் மருந்து குடித்து மிரட்டுவார்கள் என்றால் சரியல்ல. எனது மகள் அன்னலெட்சுமியும், மகன் அருண்பாண்டியும் மருந்து குடித்து செக்கானூரணி மருத்துவமனையில் சிகிச்சை அளித்தேன் என்றால் சரிதான். பிறகு மதுரை மீனாட்சி மருத்துவமனையிலும் சிகிச்சை அளித்தார்கள். எனது கணவர் இறந்து 30 நாட்களுக்குள் எனது மகள் அன்னலெட்சுமிக்கு மருந்து குடித்துவிட்டார் என்று மதுரை மீனாட்சி மிஷன் மருத்துவமனையில் வைத்து வைத்தியம் பார்த்தேன். எனது பையன் அருண்பாண்டியன், செக்கானூரணி சுபம் மருத்துவமனையில் வைத்து மருந்து குடித்ததால் என் மகள் சிவப்பிரியா இறப்பதற்கு 1 மாதத்திற்கு முன்பு சிகிச்சை அளித்தேன். அந்த சமயத்தில் விருமாண்டிதான் ஆட்டோவில்அவர்களை வைத்து சிகிச்சைக்கு அழைத்துச் சென்று சிகிச்சைக்கு சேர்த்தார் என்றால் சரியல்ல. மூவேந்திரன் என்பவர் எனது பிள்ளைகளை மருத்துவமனையில் சேர்க்கும் போது உடன் வந்தார். அவரும் எனக்கு நாத்தனார் மகன் ஆவார். எனது இன்னொரு நாத்தனார் பெயர் ரதி ஆகும். எனது வீடும், 1 வது எதிரி குடியிருக்கும் கீழகுயில்குடி ஒத்த வீடும் சுமார் 15 கிமீ தூரம் இருக்கும் என்றால் சரியல்ல. பஸ்சில் போவது என்றால் முக்கால்மணி நேரம் தூரத்தில் உள்ளது. எனக்கு. என் குழந்தைகள் அடிக்கடி மருந்து குடிக்குதே என்று பாதுகாப்பு செய்யவேண்டும் என்று எனது சொந்தபந்தத்திடம் சொல்லி புத்திமதி சொல்லசொன்னேன் என்றால் சரிதான். எனக்கு செல்போன் உள்ளது. எனது மகள் சிவப்பிரியா தினமும் என்னிடம் செல்போனில் பேசுவார். சம்பவ தினத்தில் காலை 08.30 மணிக்கு எனது மகள் சிவப்பிரியா என்னிடம் போனில் பேசினார். அதன்

பிறகு நானும் எனது மகனும் இரு சக்கர வாகனத்தில் சென்றுகொண்டிருந்த போது எனது மச்சினன் சமுத்திரபாண்டி எனக்கு போன் செய்தார். உடனே நான் தான், மதுபாலாவிற்கும், ஜோதிக்கும் தகவல் சொன்னேன் என்றால் சரிதான். அதே போல், நான் போகும் வழியிலேயே எனது மருமகன் விருமாண்டி எனக்கு போன் செய்தார். எனக்கு செல்போனில் கால் வந்தால் எடுக்கத்தெரியும். செல்போனில் பேசவும் தெரியும். செல்போனை பயன்படுத்தத் தெரியும். எனது மகன் அருண்பாண்டி, மகள் அன்னலெட்சுமி ஆகியோர் எதற்காக மருந்து குடித்தார்கள் என்று எனக்குத் தெரியும். 9 வது படிக்கும்போது, அறியாத வயதில் விளையாட்டாக குடித்துவிட்டார்கள். நான் போய் பார்த்தபோது, எனக்கு மயக்கம் வருவதற்கு முன்பாக ஒரு 15 நிமிடம் அங்கு இருந்தேன். நான்போனில் பேசிக்கொண்டே சென்று சேர்ந்த போது காலை சுமார் 09.30 மணி இருக்கும், விருமாண்டி வீட்டில் அந்த ஊர் ஜனங்கள் அனைவரும் கூடி இருந்தார்கள். அந்த ஊர் ஜனங்களில் எனக்குத் சொந்தக்காரர்கள் உள்ளார்களா என்றால் இல்லை. நான் அங்கு சென்றபோது, எத்தனை நபர்கள் இருந்தார்கள் என்றால் 4 பேர் இருந்தார்கள். 1/4 மணி நேரத்தில் ஊர்காரர்கள் வந்தார்கள். வேகமாக ஆட்கள் வந்துவிட்டார்கள். நிறைய ஆட்கள் வந்தார்கள். மதுபாலா, ஜோதி, ஆகீயோர் எவ்வளவு நேரத்தில் அங்கு வந்தார்கள் என்றால் மதுபாலா, ஜோதி அவர்கள் உள்ளே வர சிவப்பிரியாவை தூக்கிவிட்டார்கள். அதன் பிறகு ஒரு கால்மணி நேரம் கழித்து நாகேந்திரன் , சசிக்குமார் மற்றும் செல்லூர்காரர்கள் மற்றும் எனது அண்ணன்கள், ஊர்காரர்கள் வந்தார்கள். நான் உள்ளே நுழையும்போதே என்னுடைய கையில் செல்போன் இருந்ததா என்றால் நான் மயக்கம்போட்டுவிட்டேன், எனது கையில் செல்போன் இருந்ததா என்று எனக்குத் தெரியவில்லை. அதே செல்போன் தான் இப்போதும் வைத்துள்ளேன். நான் உள்ளே நுழைந்ததுமே எனது மகள் சிவப்பிரியா இறந்தது பற்றி தெரிந்து கொண்டேன். நான் எனது செல்போனில் இருந்து எனது உறவினர்களுக்கு எனது மகள் இறந்ததை சொல்லவில்லை. நான் தான் சுயநினைவு இல்லாமல் இருந்தேன். 1 வது எதிரி விருமாண்டி தேவர் வீட்டில்

சிவப்பிரியாவின் சடலத்தை எடுக்கும்போது எத்தனை மணி இருக்கும் என்றால் சுமார் 10.00 மணிக்குள் நடந்தது. 1 வது எதிரி விருமாண்டி தேவர் வீட்டில் இருந்து சுடுகாடு எவ்வளவு தூரம் உள்ளது என்று எனக்குத் தெரியாது. அதனால் யார் யார் போனார்கள், யார் எரித்தார்கள் என்று எனக்குத் தெரியாது. எனது மகளை தூக்கி எதில் வைத்து கொண்டு போனார்கள் என்று எனக்குத் தெரியாது. மயக்கம்போட்டு விழுந்த நான், தூக்கிய ஆட்களை எவ்வாறு சொல்கிறேன் என்றால் நான் எனதுமகளை எனது மடியில் தான் போட்டு வைத்திருந்தேன். அவ்வாறு 10 நிமிடம் எனது மடியில் வைத்திருந்தேன். எனது மகளை தூக்கியவர்களிடம் எதற்காக எங்கு கொண்டு செல்ல தூக்கினார்கள் என்று நான் கேட்டு தெரிந்துகொள்ளவில்லை. நான் நாகமலைபுதுக்கோட்டையில் சிகிச்சை பெற்றதற்கு சிகிச்சை குறிப்பு எதுவும் போலிசார் விசாரணையின் போது நான் கொடுக்கவில்லை. ஆஜர் எதிரிகள் நகையைக் கேட்டார்கள், தொந்தரவு செய்தார்கள் என்று எனது விசாரணையில சொல்லலியுள்ளேன். ஆஜர் எதிரிகள் எனது உடன் பிறந்த சகோதரரின் குடும்பம் என்பதால் அவரக்ளுக்கு நான் எவ்வளவு கஷ்டப்படுகிறேன் என்று நன்கு தெரியும் என்றால் சரிதான். அதே போல் எதிரிகளும் கஷ்டப்படுகிறார்கள் என்று எனக்குத் தெரியும். நான் போட்டதை விட கூடுதலாக எதிரிகள் நகை கேட்டகவில்லை என்றும், நான் எனது மகள் திருமணத்திற்கு போட்ட நகையைக் கொடு, அடகு வைத்துக்கொள்கிறேன் என்று கேட்டார்கள் என்றால் சரிதான். கணவன் மனைவிக்குள் அவர்களுக்குள் போடப்பட்ட நகைகளை என்ன செய்யவேண்டும் என்று முடிவெடுக்கும் உரிமை அவர்களுக்கு உண்டு. எனது மகள் சம்பவ தினத்தில் காலை 08.00 மணிக்கு எனக்கு போன் செய்ததாக எனது புகாரில் சொல்லியுள்ளேன் என்றால் 08.30 மணி என்று சொன்னேன். புகாரில் எனது மகள் என்ன பேசினார் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை. வந்து சொல்கிறேன் தம்பியை அனுப்பிவிடு என்று சொன்னார். தம்பியை அனுப்பு, வந்து சொல்கிறேன் என்று புகாரில் குறிப்பிட்டு சொல்லவில்லை. புகாரினை யார், எங்கு வைத்து எழுதினார்கள் என்றால் நாகமலைபுதுக்கோட்டை

ஸ்டேசனில் வைத்து எழுதினார்கள். யார் எழுதினார்கள் என்று தெரியாது. நான் சொல்ல சொல்ல எழுதினார்கள். புகாரில் எனது மருமகனையும், அவரது அம்மாவையும் மட்டும் தான் புகாரில் குறிப்பிட்டுள்ளேன். 4 பேர் தூக்கினார்கள் என்று சொல்லவில்லை. புகாரினை எனது மகன் அருண்பாண்டி எழுதவில்லை என்றால் அவன் தான் எழுதினான் என்று நினைக்கிறேன். நான் சொல்லச் சொல்ல யாரோ எழுதினார்கள். போலிஸ் ஸ்டேசனுக்கு நான் செல்லும்போது மாலை சுமார் 05.00 இருக்கும். அதற்கு முன்பாக RDO அம்மா எதிரிகள் வீடான ஒத்த வீட்டிற்கே வந்துவிட்டார்கள். RDO வரும்போது மதியம் சுமார் 01.00 மணி இருக்கும். அங்கு வைத்தே RDO இறந்துபோன சிவப்பிரியாவின் அம்மா யார் என்று விசாரணை செய்து தெரிந்துகொண்டார். அவ்வாறு RDO விசாரணை செய்யும்போது, ஜோதி, மதுபாலா, சந்திரா ஆகிய உறவினர்கள் என்னுடன் தான் இருந்தார்கள். கழுவத்தேவரும் அன்று என்னுடன் தான் இருந்தார். எதிரி ஜெயபிரகாஷ் சம்பவ தினத்தில் எத்தனை மணிக்கு வந்தார் என்று எனக்குத் தெரியாது. தூக்கம் போது தான் பார்த்தேன். RDO அம்மா விசாரிக்கும்போது, நான், கழுவத்தேவர், மதுபாலா, ஜோதி ஆகியோர் சம்பவ இடத்தில் வைத்தே என்ன நடந்தது என்று சொன்னோம். அவர்கள் சொல்லித்தான் நான் போலிஸ் ஸ்டேசன் சென்றேன். போலிஸ் ஸ்டேசன் செல்லும்போது என்னுடன், ஜோதி., எனது மகன், எனது சித்தப்பா சுப்பு, மதுபாலா, நாகேந்திரன், சந்திரா ஆகியோர் வந்தார்கள். கீழக்குயில்குடியிலிருந்து நாகமலைபுதுக்கோட்டை காவல்நிலையம் சுமார் 8 கிமீ தூரம் இருக்கும். ஆட்டோவில் தான் சென்றோம். RDO அம்மா நம்மளை புகார் கொடுக்க சொன்னார்களே, எப்படி கொடுக்க வேண்டும் என்று பேசிக்கொண்டு சென்றோமா என்றால் நான் அந்த அளவுக்கு நிலையில் இல்லை. கத்திக்கொண்டே சென்றோம். என்ன நடந்தது, எப்படி நடந்தது என்று தெரிந்து கொண்டுதான் சென்றோமா என்றால் தூக்கு போட்டது பற்றி தெரிந்து கொண்டு சென்றோம். RDO அம்மா வராமல் போய் காவல்நிலையத்திற்கு போ என்று சொல்லாமல் இருந்தால் நான் போயிருக்க மாட்டோம் என்றால் நாங்கள் அதற்கு முன்பாகவே 100 க்கு போன்

செய்தோம். நாங்கள் 100 க்கு போன் செய்வதற்கு முன்பே எனது மகளை தூக்கி சென்று விட்டடார்கள். எனது மகளை எரித்தபிறகு தான் எனது அண்ணன் மகள் மதுபாலா 100 க்கு போன் செய்தார். நான், மதுபாலா, சந்திரா ஆகிய மகளிர் எல்லாம் எரிக்கும் இடத்திற்கு செல்லவில்லை. அதனால் எரித்தார்களா, என்ன செய்தார்கள் என்று நான் நேரடியாகப் பார்க்கவில்லை. ஊர்காரர்கள் சொன்னார்கள். எவ்வளவு நேரம் கழித்து எனது மகளை எரித்த விபரத்தை தெரிந்து கொண்டேன் என்றால் ஆஸ்பத்திரிக்கு நான் போய்விட்டு, என்னை சிவப்பிரகாஷ் எனது வீட்டிற்கு நாகமலைபுதுக்கோட்டைக்கு கொண்டு சென்றார்கள், மீண்டும் எனது மகள் இருந்த வீட்டிற்கு வந்தோம். ஒரு மணி நேரம் கழித்து எனது மகளை எரித்து விட்டார்கள் என்று தெரிந்து கொண்டேன். எனது கணவரின் தம்பிகள், எனது உறவினர்கள், கழுவத்தேவர், ஆகியோர் அந்த ஒரு மணி நேரமும் அங்கு தான் இருந்தார்கள். 100 க்கு போன் செய்த பிறகு போலிசார் வந்தார்கள். 100 ம் நம்பர் போலிஸ்காரர்கள் வந்தபோது நான் வந்துவிட்டேன். 100 போலிஸ்காரர்களில் எந்த அதிகாரி, எத்தனை பேர் வந்தார்கள் என்றால் ஒரே ஒரு போலிஸ்காரர் மட்டும் வந்து விசாரித்துவிட்டு சென்றுவிட்டார். அந்த போலிஸ்காரர் வந்து எப்படி நடந்தது என்று விசாரித்தார், ஆனால் காவல் நிலையத்தில் புகார் கொடுக்க சொல்லவில்லை. அவர் போன பிறகு RDO விற்கு யார் தகவல் சொன்னார்கள் என்றால் எனது சித்தப்பா சுப்பு வந்த பிறகு, போலிஸ்காரர்கள் வந்து விசாரித்து சென்றார்கள் என்று சொன்னேன், அவர் தான் RDO விற்கு தகவல் சொன்னார். எனது சித்தப்பா சுப்பு சம்பவ சமயத்தில் ஆளும்கட்சியில் ஒன்றியச் செயலாளராக இருந்தார். சுப்பு RDO அம்மா விற்கு தகவல் சொல்லும்போது நேரம் என்ன இருக்கும் என்றால் நான் இவ்வளவு நேரம் குத்துமதிப்பாகத்தான் நேரம் சொன்னேன். அதனால் சுப்பு எத்தனை மணிக்கு RDO அம்மாவிற்கு தகவல் சொன்னார் என்றும், எத்தனை மணிக்கு RDO அம்மா வந்தாரகள் என்றும் எனக்குத் தெரியாது. 04.02.2017 ம் தேதி RDO அம்மா எங்களை எல்லாம் சம்பவ இடத்தில் வைத்து விசாரித்து எழுதிக்கொண்டார்கள். RDO அம்மா எழுதிக்கொண்ட

பிறகு தான் ஸ்டேசனுக்கு சென்றோம் என்றால் காவல்நிலையத்தில் வைத்து தான் RDO அம்மா எழுதினார்கள். ஊரில் வைத்து சம்பவ இடத்தில் வைத்து சொன்ன போது RDO அம்மா எழுதிக்கொண்டார்கள். RDO அம்மா என்னை விசாரித்தபோது, காவல்நிலையத்தில் தகவல் சொன்னிர்களா என்று கேட்டார்கள் நாங்கள் தகவல் கொடுத்துவிட்டோம் என்று சொன்னோம். RDO அம்மா 1 வது எதிரி வீட்டில் வைத்து விசாரணை செய்த பிறகு சுமார் 1/2 மணி நேரம் கழித்து காவல்நிலயத்திற்கு போனோம். எங்கள் ஊரில் அப்போது, கீழக்குயில்குடி ஒத்த வீட்டில் RDO அம்மா வந்து போய், நாங்கள் காவல் நிலையம் செல்வதற்கு முன்பாகவே எனது உறவினர்கள் அங்கு வந்துவிட்டார்கள். அதே போல் 1 வது எதிரியின் உறவினர்களும் வந்துவிட்டார்கள். நமது ஊரில், நமது வழக்கப்படி திருமணத்திற்கு போகாவிட்டாலும், சாவுக்கு செல்வது வழக்கம். சுமார் 100 பேர் அன்றைய தினம் வந்தார்கள். எனது தரப்பிற்கும், 1 வது எதிரி தரப்பிற்கும் எந்த விதமான சண்டை சச்சரவும் இல்லை என்றால் சரியல்ல. 1 வது எதிரியை ஒளித்துவைத்துக்கொண்டார்கள். RDO அம்மா விசாரிக்கு்போது, 1,2 எதிரிகளையும் காவல்நிலையத்தில் வைத்து விசாரித்தார்கள். RDO அம்மா விசாரணை முடியும் வரை பசும்பொன்னும், 1 வது எதிரியும் காவல்நிலையத்தில் தான் இருந்தார்களா என்றால் எனக்குத் தெரியாது. போலிஸ் விசாரணையில், நான் எனது நாத்தனார் பசும்பொன்னுக்கு பணம் கொடுக்க போனேன் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. எனது நாத்தனார் ஈஸ்வரிக்கு பணம் கொடுக்கத்தான் போனேன். எனது நாத்தனார் ஈஸ்வரி நாகமலைபுதுக்கோட்டையில் குடியிருக்கிறார். நான் பசும்பொன்னுக்கு போன் செய்து இன்று பணம் கொடுக்க வருகிறேன் என்று சொன்ன போது, அவர் இன்று வரவேண்டாம், நாளைக்கு வா என்று நான் போலிஸ் விசாரணையில்சொல்லியுள்ளேன் என்றால் தவறு. நான் பசும்பொன்னிடம் போனில் பேசவில்லை. நான் 2 வது எதிரியிடம் வாங்கிய கடனை திரும்பி கொடுக்க சென்றபோது தான் இந்த அசம்பாவிதம் நடந்தது என்றால் சரியல்ல. சம்பவம் நடக்கும்போது, 1 வது எதிரி விருமாண்டியும்,

2 வது எதிரி பசும்பொன்னும் சம்பவ இடத்திலேயே இல்லை என்றால் சரியல்ல. எனது அண்ணன் மகன் ஜெயபிரகாஷ் தான் கதவை உடைத்து எனது மகளை காப்பாற்ற முயச்சி செய்தார் என்றால் சரியல்ல. அப்போது சவாரி போயிருந்த 1 வது எதிரி, ஜெயப்பிரகாஷ் தகவல் சொல்லி தனது மனைவியை காப்பாற்ற ஆட்டோவில் கொண்டுசென்று, காலம் தாழ்ந்துவிட்டது என்று மீண்டும் எனது மகளை வீட்டிற்கு கொண்டுவந்தார் என்றால் சரியல்ல. அவ்வாறு வீட்டிற்கு கொண்டு வருவதா, காவல்நிலயம் கொண்டு செல்வதா என்று கேட்கத்தான் 1 வது எதிரி எனக்கு போன் செய்தார் என்றும், வேண்டாம்பா, இதுவே நம்ம வீட்டு பிள்ளைகளுக்கு வழக்கமாகி போயிடுச்சு, இன்னொரு பிள்ளைக்கு கல்யாணம் செய்ய வேண்டியிருக்கு அதனால் வீட்டிற்கே கொண்டுவந்துவிடு நான் சொன்னேன் என்றால் சரியல்ல. எனது உறவினர்கள் எல்லாம் வந்து, ஊரில் சேரும் போது மதியம் சுமார் 12.00, 12.300 மணி இருக்கும் என்றாலும் அதுவரை நான் எனது மகள் சிவப்பிரியாவின் உடலை வீட்டில் தான் வைத்திருந்தோம் என்றால் சரியல்ல. எங்கள் குடும்பத்தில் இதுவே வழக்கமாகி உள்ளதால், எனது 2 வது மகளுக்கு திருமணம் ஆகாமல் போய்விடும் என்று எங்கள் குடும்பத்தினர் தான் அருகில் உள்ள சுடுகாட்டில் எரித்தார்கள் என்றால் சரியல்ல. அவ்வாறு எரித்து முடிக்கும்போது எனது மகளின் நகைகள் அனைத்தையும், கழுவத்தேவர் ஆகியோரை வைத்து, பஞ்சாயத்து பேசி அனைத்து நகைகளையும் வாங்கிக்கொண்டேன் என்றால் சரியல்ல. இது தெரிந்த உள்ளூர்காரர்கள், வெளியூரில் இருந்து வந்து, நம்ம ஊரில் தப்பு செய்கிறார்களே என்று கீழக்குயில்குடி ஒத்தவீட்டுக்காரர்கள் தான் போலிஸ்க்கு தகவல் சொன்னார்கள் என்றால் சரியல்ல. RDO அம்மா வந்து விசாரைண செய்த பிறகு, நான் செய்தது தப்பு என்றும், என் மீது நடவடிக்கை எடுக்கப்போகிறார்கள் என்ற பயத்தில் தான், எதிரிகள் மீது தவறாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் சொன்னது போல், சொன்ன விதத்தில், சொன்ன நபர்களால் சிவப்பிரியாவின் சடலத்திற்கு எரியூட்டப்படவில்லை என்றால் சரியல்ல. எதிரிகள் யாருக்கும் இறந்துபோன சிவப்பிரியாவின் உடலை மறைத்து

வைக்கும் எண்ணமோ, அழிக்கும் எண்ணமோ கிடையாது என்றால் சரியல்ல. நான், எனது உறவினர்கள் எல்லாம் சேர்ந்து எனது மகள் இறந்ததை ஆதாயம் பார்க்க முயற்சிக்கிறேன் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,
மதுரை